குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 14 — 4 — 59 செவ்வாய் | இசை: 45

அச்சந்தவிர்!

அஞ்சாமை வேண்டும் தமிழர்க்கே – பகையின்
அழிவுக் கடலின் ஆழத்தில் மகிழ
(அஞ்சாமை)

கெஞ்சாமை பகைவரைக் கிட்டாமை பகைவர்சொல்
கேளாமை காட்டிக் கொடாமைபின் னிடாமைஎனும்
(அஞ்சாமை)

தஞ்சமாய் வந்தவர் தலையினில் ஏறினார்
தமிழர் மேன்மையைத் தாழ்த்துக் கூறினார்
நெஞ்சீர மற்றவர்; இட்டாரைச் சீறினார்
நேரினில் மக்கள் இயல்பையே மீறினார்
(அஞ்சாமை)

பிச்சைக்கு வந்தவர் அதிகாரம் பெற்றார்
பிறர்நலம் அழிப்பதோர் பேடிமை உற்றார்
பொய்ச்சி ரிப்புச் சிரித்திடக் கற்றார்
பொதுவறம் கொல்வதில் நாணமே அற்றார்
(அஞ்சாமை)

தமிழர் உணர்ச்சியைக் குறைத்தெடை போட்டார்
தமிழர் எதிர்ப்புக்குத் தப்பிட மாட்டார்!
தமிழ்நாட்டுக் குடையவர் யார்?தமிழ் நாட்டார்.
தமிழரை எதிர்ப்பவ ரோ அயல் நாட்டார்

வசைக்கும் சிறைக்கும் குண்டுக்கும் எதிர்ப்புக்கும்
வாட்டிடும் படுகொலைக் கும்வரும் சாவுக்கும்
அசைக்க முடியாத மலையை நிகர்க்கும்
அஞ்சாமை ஒன்றே வேண்டும் தமிழர்க்கு.

★ƒ★

குண்டு போடு!

தமிழுக்கு நீசெயுந் தொண்டு — நின்
பகைமீது பாய்ச்சிய குண்டு (தமிழுக்கு)

தமிழில்நீ புலமைபெற வேண்டும் — அது
தமிழ்பெறத் தமிழரைத் தூண்டும்
தமிழிலே யேபேச வேண்டும் — அது
தனித்தமிழ் வளர்ச்சியைத் தூண்டும் (தமிழுக்கு)

தமிழ் பேசு; தமிழிலே பாடு — நீ
தமிழினிற் பாடியே ஆடு
தமிழ்ப்பாட்டை யேகாதிற் போடு — தமிழ்
தப்பினால் உன்காதை மூடு (தமிழுக்கு)

வாணிக விளம்பரப் பலகை — அதில்
வண்டமிழ் இலாவிடில் கைவை
காண்கநீ திருமணஅழைப் பைப் — பிற
கலந்திருந் தால்அதைப் புய் புய் (தமிழுக்கு)

பொருள்களைத் தமிழினில் அழைப்பாய் — பிற
பொருந்தாப் பெயர்களை ஒழிப்பாய்
தெருப்பெயரில் தமிழே இழைப்பாய் — அதிற்
சீறுவார் மடமையை ஒழிப்பாய் (தமிழுக்கு)

தமிழிலே வழிபாடு வேண்டிப் — பின்
தளர்ந்தனன் முன்னமோர் ஆண்டி
அமைவாக அவனையும் தூண்டி — நீ
அறஞ்செய்க சோம்பலைத் தாண்டி (தமிழுக்கு)

உரைசெய்ய நூலெழுத வந்தோர் — அவற்
றுள்வடசொல் ஏன்தாம் கலந்தார்?
சரிசெய்ய ஆனதை நீபார் — அவர்
தடுத்தால் தொடங்குவாய் மொழிப்போர் (தமிழுக்கு)

வடமொழி புகழ்ந்திடும் தமிழ்வாய் — எதிர்
வரக்காணில் காறிநீ உமிழ்வாய்
கடன்என்று தமிழ்த்தொண்டில் அமிழ்வாய் — ஒரு
கடல்போன்ற புகழ்கொண்டு கமழ்வாய் (தமிழுக்கு)

இறைதடுத் தாலும்இந்நாட் டுக்கு — மற்
றிங்குளோரின் குறைபாட் டுக்குச்
சிறிதும்அஞ் சேல்தொண்டு செய்வாய் — கடுஞ்
சிறையறை திருமணவறை உனக்கு! (தமிழுக்கு)

புதுச்சேரி, தி. வ. ஆ. ககூகூ௦ பங்குனி உரு

சொல்லாராய்ச்சி I

<★>

தில்லி நம் தமிழை ஒழிப்பதே நோக்க மாகக் கொண்டுள்ளது. அவ்வாறே செயலாற்றி யும் வருகின்றது. தமிழ் நாட்டிலும் தமிழை ஒழித்துக் கட்டப் பார்ப்பனர் விரைந்து வேலை செய்து வருகின்றனர். இந்த நிலையில் தமிழர் ஆகிய நாம் மேற்கொள்ள வேண்டியவற்றில் முதன்மையானது ஒன்றே ஒன்று. அதுதான் தமிழ்ச் சொல் ஆராய்ச்சி.

தமிழ்ச்சொல் ஆராய்ச்சியால் நாம்அடையும் பயன்கள் பல. தமிழின் தொன்மை தெரியும். தமிழ் வடமொழிக்கு முற்பட்டது என்பது தெரியும்; தமிழ்ச் சொற்களிலிருந்தே ஆரியச் சொற்கள் வந்தன என்பது தெரியும்–இவைகள் எல்லாம் தெரியவே, தமிழனின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை, எழுச்சி, மான உணர்ச்சி ஆகியவை தோன்றும். தோன்றவே தமிழரிடம் ஓர் ஒற்றுமை உண்டாகும். தில்லிமேல் நாம் தொடங்கியுள்ள போராட்டம் சிறக்கும்; தமிழகம் மீளும்!

தமிழ்ச்சொற்களை ஆராய்வதான இவ்வொன்றிலேயே இத்தனையும் அடங்கியுள்ளனவா என ஐயப்படுதல் வேண்டாம்.

எடுத்துக் காட்டுக்காக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்னும் நல்லாசிரியர் "தொன்மை" என்னும் சொல்பற்றி ஆராய்ந்துள்ளதைச் சுருக்கி இங்கே தருகின்றோம்:

தொன்மை என்பதும் தொல்லை, தொன்று என்பனவும் "பழையதாகிய நிலை" என்ற பொருள் தருவனவே. தொன்மையுடையார் தொடர்பு. (நாலடியார் உகசு) தொல்லைக்கண் நின்றோர் (திருக்குறள் அ௦சு) தொன்றுமொழிந்து தொழில் கேட்ப (மதுரைக்காஞ்சி எஉ) என்பன காண்க.

இதுமட்டு மன்று. புகழ் எனவும். பழையதொரு பொருள்மேற் செய்த நூல் எனவும் பொருள் கொள்ளப்படும் தோல் என்னும் சொல்லும் தொன்மையையே விளக்கும் தொல்வரவும் தோலும் கெடுக்கும் (குறள் க௦ச) என்பதில் வரும் தோல் என்பது தொன்மையாய் வரும் புகழ்என்றே பெறப்படுதல் காண்க.

எனவே தொன்மை, தொல்லை, தொன்று தோல் என்னும் நான்கு சொற்களும் ஒரே பொருள் உடையவை என்பதையும் இந்நான்கு சொற்களும் தொல் என்ற அடிச்சொல்லையே கொண்டிருக்கின்றன என்பதையும் மனத்திற் கொள்க.

இனி, இவ் வடிச் சொல்லாகிய தொல் என்பதினின்று தொன்மை, தொல்லை, தொன்று தோல் ஆகியவை தோன்றுவதுண்டோ எனிற் காட்டுவோம்.

நல் என்பது நன்மை நன்று நன்றி என்றும்
எல் என்பது எல்லை என்று என்றும்
நாள் என்பது நான்று ஞான்று என்றும்
நாண் என்பது நான்று என்றும்
கொள் என்பது கொளு கொள்கை கோள் [என்றும்
கொல் என்பது கொன்றல் கோறல் என்றும்
செல் என்பது சென்றல் சேறல் என்றும்

வந்தன கண்க.

இவற்றின் ஈற்றை நோக்குக. ஐ, கை, மை, று (து) என்பவை இறுதிநிலைகள். இவைகள் உண்டாகும் வரலாற்றைப் பிறகு பார்ப்போம்.

இனி, தொல் என்றும் அடி தோன்றியது எப்படி? அது தமிழ்த் தலையடிகளுள் ஒன்ரு? (தலையடியாவது பலசொற்களுக்குத் தோற்றுவாயாய், தான் பிறிதோர் அடியினின்று

பறவாததாய் இருப்பது. வழியடியானது தானே தலையடியினின்று பிறந்ததாயினும் தனக்குப் பின் வேறு சொற்கட்குத் தோற்றுவாயாயும் நிற்பது) இதுபற்றி ஆராய்வோம்.

இந்தத் தொல் என்பதை அடியாகக் கொண்டே உண்டாகிய வினை உருவம் தொலைதல் என்பது; தொலைதல் தூரத்தில் செல்வது. போரிற் புறங்காட்டியவன் தூரத்திற் செல்வதால் தொலைதல் புறங்காட்டிச் செல்வதையே குறித்தது.

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் (புறம் எக) என்பதிற்போல.

மேலும், சென்று சென்று தேய்தலாகிய குறைதலும் (குறள் எசுஉ) சேர்தலும் (மணிமேகலை உச, கூக) அழிந்து படலும் (பதிற்றுப் பத்து சங, கக) என்னும் கருத்துக்களையும் இத் தொலைதல் என்னும் சொல் அடைகின்றது காண்க. சேய்மைக்கண் ஒடி மறைதல் ஆகிய தொலைதல் என்பதினின்றே தோற்றலும் தோல்வியும் பிறப்பதையும் ஈண்டுக் கண்டு மகிழ்க.

எனவே தொலை தோல் தோல்வி தோல்தல் தோற்றல் என அடிச்சொல்லின் உயிர் நீண்டும் இறுதிநிலை பெற்றும் வரும். தொலைதல்தான், தொலைத்தல் தொலைச்சுதல் எனவும் ஆகும். இவை புறங்கொடுத்து ஓடச்செய்தல் (திருக்கோவையார் ககங) முடித்தல் (புறம் உகூ) கொல்லுதல் (மலைபடுகடாம் களசு) என்னும் பொருள்களைப் பெறும்.

தொன்மை முதலிய நான்கு சொற்களினின்றும் பழையதாகிய நிலை என்ற பொருள் கிடைத்தமை எவ்வாறு என்றால் காலத்தளவில் சேய்மைக்கண் உள்ளது எது, அது பழையது தானே. அண்மையான காலத்தில் உள்ளது நிகழ்வு. சேய்மையான காலத்தில் உள்ளது தொன்மை எனக் காண்க.

இதையடுத்து இன்னொன்று தெரிந்து கொள்ளவேண்டும். தமிழ்மொழியின் ஒலி வேறுபாடுகளை உற்று நோக்குமிடத்து.

ஒகரம் உகரத்தினின்று பிறந்தது என்பதும் உகரம் இயல்பாக ஒகரமாய் மாறும் என்பதும் அறியத்தக்கவை கீழ்க்காட்டும் எடுத்துக் காட்டுக்களைக் காண்க.

உள்கு	—	ஒல்கு
குதித்தல்	—	கொதித்தல்
துளை	—	தொளை
நுதுத்தல்	—	நொதுத்தல்
புழை	—	பொளி
முகிழ்	—	மொக்குள்

நெறியறிந்து வரி வாங்கு!

- திருச்சி, இளங்கீரன். -

பழந்தமிழ் மன்னர்களுள் அநேகர் செய்யுள் பாடும் வல்லமை உடையவர்களாய் இருந்தார்கள். அவர்களில் பாண்டியன் அறிவுடை நம்பி என்பானும் ஒருவன். அவனது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை அகநானூறு, புறநானூறு முதலிய நூல்களில் காணப்படுகின்றன. மேலும் அவன் பிசிராந்தையார் காலத்தில் வாழ்ந்தவன் என்பது குறிப்பிடத் தக்கது.

அறிவுடை நம்பியும், ஆந்தையாரும் அரசியல் பற்றிக் கலந்து உரையாடுவர். அறிவுடை நம்பியோ ஆந்தையாரோடு கலந்து பேசுவதையே பெரிதும் விரும்புவான்.

அறிவுடை நம்பியின் ஆட்சியில் வரி வாங்குவதில் சில குறைகள் காணப்பட்டன. ஆந்தையார் அதை அவனுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்று விரும்பினர். அதற்கான தகுந்த சூழ்நிலையையும் எதிர்நோக்கி இருந்தார்.

ஒருநாள் ஆந்தையார் வழக்கம்போல் அவைக் களம் வந்தார். அப்போது அவையிலுள்ளவர்கள் இறைகொள்ளும் முறைகளைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். ஆந்தையாரும் நிலைமையை பயன் படுத்திக்கொண்டு, "அரசே ஒரு மா அளவிற்குக் குறைந்த நிலமாயினும் அதில் விளைந்த நெல்லை முறைப்படியாக அறுத்து சேமித்து யானைக்கு

(தொடர் 15-ஆம் பக்கம்)

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

மேதை

இதை வடசொல்லா தமிழ்ச்சொல்லா என்று கேட்கின்றார் ஒருபுலவர். அவர் பெயரை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. காரணம் அச்சம் போலும் !

மேதை மட்டுமன்று மேதாவி மேது மேதகு மேதகை இவைகள் அனைத்தும் தூய தமிழ்க் காரணப் பெயர்களே.

மேதக்க சோழவளநாடு என்பதில் மேதக்க என்பதை நோக்குக. இதில் மேன்மை என்பதன் அடியாகிய மே என்பதை ஊன்றி அறிவார்க்கு இச் சொற்கள் அனைத்தும் வடவருடையன அல்ல என்பதை அறிந்துகொள்வது எளிதாகும்.

மீ என்பது மீது என வந்ததுபோல மே என்பது மேது என வந்து மேன்மையை விளக்கியது காண்க. மேதை என்பதில் ஐ பெயர் இறுதிநிலை; ஒருமைக்குரியது. மேதகு மேன்மைத் தகுதி உடைமை எனவே இவை தூய தமிழ்க்காரணப் பெயர்கள் என்று தெளிக.

★ ★ ★

கம்பலம் – கம்பளம்

இது தூய தமிழ்க் காரணப் பெயர். விளக்கிக் காட்டிப் படிப்போர்க்குத் தமிழின் தொன்மை உணர்த்தப்படும்.

செந்நெ ருப்புணும் செவ்வெ லிம்மயிர்
அந்நெருப் பளவு ஆய்பொற் கம்பலம்

இச் சீவகசிந்தாமணி மேற்கோளை (உசுஅசு) நுணுகி ஆராய்ந்தால் செவ்வெலி மயிர் கொண்டு நெய்ததே கம்பலம் – கம்பளம் என விளங்கும். இவ்வடிகட்கு நெருப்பைத் தின்னும் எலிமயிர்க் கம்பலம் என்று நச்சினார்க்கினியார் பொருள் கொண்டது பொருந்தாது. செந்நிறம் ஏறிய எலிமயிர் என்பதே அதன் பொருளாகும்.

இனி முதலாவதாகக் கம்பலம் என்னும் சொல் எதனின்று தோன்றியது என்பது ஆராயப்படவேண்டும். சொல்லாராய்ச்சி இல்லாதவர் இதனை ஒரு வடசொல் என்று கூறிவிடுவர். அவ்வாறானால் வடமொழியில் அதற்குப் பொருத்தமான அடிச்சொல் கூற முடியுமா ? வாசசுபத்தியம் முதலிய அகர வரிசை நூலோர் ஆசைப்படுதல் எனும் பொருளுள்ள கம் என்ற அடியினின்று இது பிறந்தது என்பர். அது பொருந்தாது. அன்றியும் கம்பலம் என்ற சொல், கிரேக்கர், இலத்தீனியம் பழைய ஆங்கிலம் முதலிய பிற ஆரிய மொழிகளுள்ளும் இல்லை. வடமொழியில் இச்சொல் ஒர் வகை மானின் பெயராய் வழங்குவதுண்டு. கம்பலி என்னும் சொல்லுருவம் காலத்தால் மிக முற்பட்டது என்று மோனியர் உவில்லியம்சு, தம் அகவரிசை நூலில் கூறியுள்ளதும் நினைவிற்கொள்ளத் தக்கதாகும். அவர் சொல்லியபடியே காலத்தால் முற்பட்ட நாகரிகம்வாய்ந்த தமிழில் இக் கம்பலம் ஆடு என்று கூறிற்றுப் பிங்கலந்தை,

மேழகம் கம்பளம் தகரே திண்ணகம்
ஏழகம் கடாதுரு ஆட்டின் ஏறே

(அ- உசஅஉ) என்பதால் அறிக.

இதனால் கம்பலம் – கம்பளம் ஆட்டின் பெயர்.

இனி, எலிமயிர் என்று வந்துள்ளதை ஆட்டு மயிரால் அன்றோ ஆனது கம்பளம் என ஐயுறுவர். எலிமயிர் என்பதில் உள்ள எலி என்ற சொல் ஆடு என்பதே என்பதை மேஷம் ஏன்பது பற்றி விளக்கும்போது விளக்கப்படும்.

இந்தி கட்டாயமில்லை

புலவர் பழனிவேலன் பி. ஓ. எல்

தமிழ் நாட்டில் வேற்று நாட்டார் குடிபுகுமுன் தமிழ் மொழியே தனியாட்சி நடாத்தியுளது. அரசியல் மொழியும் அதுதான்; அனைத்து வகையிலும் பயன் பட்டதும் அதுவே. அயலார் குடியேறிய ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளாகத்தான் தமிழ்க் கன்னியின் தூய்மையில் பிற மொழித் தூசு படியத் தொடங்கியது. ஆனாலும் அதனை அடிக்கடி போக்கிக் கொண்டுதான் வந்துள்ளாள், தூசு - பிறகு, தற்காலம் நம் நாட்டுப் பெண்களும் ஆண்களும் முகத்தில் பூசிக்கொள்ளும் மணப்பொடி! (Scented Powder) யாக மாறித் தமிழ்க் கன்னியின் முகத்திலும், உடலிலும் படியத் தொடங்கியது, மணமாயிருக்கிறதே என்றோ? அன்றிப் புதுமையாய் இருக்கிறதே என்ற காரணமோ? மயங்கி அத்தூளைத் துடைக்காமல் இருந்துவிட்டாள். அது நாளடைவில் அழுக்காகி நன்றாக ஒட்டிக்கொண்டது. அழுக்கென்று அறிய முடியாதபடி உடலோடு உடலாகி விட்டது. இது தான் அயல் மொழியால் கன்னித் தமிழ் பெற்ற பயன். தமிழ்க்கன்னியின் பெற்றோர்கள் மட்டும் அழுக்கு என்பதை அறிந்து அகற்ற முனைந்தால் அயலார் அது அழுக்கல்ல அழகுதரும் மணத்தூள் என்கிறார், பாவம்! அவர்கள் அறியாதவர்கள்.

இங்ஙனம் அயல் மொழியாகிய அழுக்கு மிகமிக உடம்பில் சாம்பல் பூத்து உதிரத்தொடங்கியது. தமிழ்க்கன்னியின் உடலிலிருந்து உதிர்ந்தஅழுக்குத் துணுக்குகளே பிற மொழிகளாகிய திராவிடமொழிகள், ஆனால் அவைகள் தமிழ்க் கன்னியிடமிருந்து பிரிந்ததை மறுத்துரைக்கின்றன. தாயில்லாமல் பிள்ளை பிறக்குமா?

பிற்காலத்தில் ஆங்கிலேயர் ஆடசி நம்நாட்டிற்கு வந்தது முதல் ஆங்கிலமே நூற்றைம்பது ஆண்டுகளாக ஆட்சி செலுத்தத் தொடங்கியது. அதனால் நாம் சில நன்மைகள் அடைந்தாலும் தீமைகளும் இல்லாமல் இல்லை. இன்று ஓர் ஆங்கிலச் சொல் கூடக்கலக்காமல் பேசக்கூடிய தமிழர் ஒருவர்கூட இல்லை. பட்டி தொட்டிகளெல்லாம் பரவி, தமிழ் கூட நன்றாகப் பேசத்தெரியாதவர்களும், ஆங்கிலச் சொல்லைப் பொருள் தெரியாமலும் உச்சரிக்கத் தெரியாமலும் பயன்படுத்துகின்றனர்.

வடமொழி மணப்பொடியென்றால் ஆங்கிலம் பனிவெண்பசை (Snow) எனலாம். இதனையும் பட்டிக்காட்டுப் பாமர 'பரமாயி' முதல் நகர்ப்புறத்து நாகரிக 'நங்கையர்' ஈறாகவும், கற்றறிவில்லாத கருப்பண்ணன் முதல்கற்றுத்தேர்ந்த கல்லூரி மாணவர் ஈறாக யாவருமே பயன் படுத்துகின்றனர்.

நன்றாக முகத்தைக் (மணச்சவர்க்காரம் போட்டு) கழுவி, பனிவெண்பசை தடவி, அதன் மேல் மணப்பொடி பூசி மாலை நேரத்தில் "மரீனா" கடற்கரைக்கு ஆங்கிலமும் தமிழும் அரைகுறையாய்ப் பேசிக்கொண்டு அழகாகச் செல்லும் காட்சி அறையுந்தரமன்று. இன்னொன்று கூறவிட்டுவிட்டேன் ஆங்கிலேயர் போல் அரைகுறை உடையணிந்து செல்லும் போது பார்த்தால் ஆங்கிலேயரோ என்று ஐயுறவேண்டியுளது. ஆனால் அவர்கள் ஆங்கிலம் பேசும் விதத்தைக் கேட்டால் விளங்காமலிராது. ஆகவே ஆங்கில மோகம், ஆங்கில நாகரிகமோகம் தமிழரை நூற்றைம்பது ஆண்டுக்குள் ஆட்கொண்டு விட்டன. இப்போது தனித்தமிழ் பேசுவோர் நகுதலுக்கு ஆளாகவேண்டியுளது. எல்லோரும் வேடிக்கைப்பார்வை பார்க்கின்றார்கள்.

முன்னாள் தமிழர் நூறாண்டுகட்குமேல் உயிர் வாழ்ந்தனர். இந்நாள் யாராவது நூறு ஆண்டு வாழ்ந்திருந்தால் செய்தித்தாளில் விளம்பரம் செய்யக்கூடிய வியத்தகு நிகழ்ச்சியாகி விட்டது. அப்படித்தான் இருக்கிறது பிறமொழி கலக்காமல் பேசுவோரின் இன்றைய நிலையும்.

சமஃச்கிருதமும் ஆங்கிலமும் தமிழ் நாட்டுக்கு வந்ததால் தமிழ் களங்கமுற்றது மட்டுமல்ல தமிழர் நாகரிகம், பண்பாடு யாவும் பாழாயின. போதும் போதாததற்குப் புதுமையான திரைப்படக் காட்சிகள், ஆங்கில நாகரிகத்தை யொட்டிப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. அவற்றால் கெட்டவர், கெடுவோர் கணக்கில்லை. தமிழ்ப்பண்பு தடுமாறி நிற்கின்றது. ஆரிய நாகரிகம் தமிழ்நாட்டில் பரவிய போது வள்ளுவப் பெருந்தகை இருந்தார். அதனை மறுத்து எதிர்த்துத் தமிழ் நாகரிகத்தை நிலைநாட்ட ஒரு சீரிய நூல்யாத்துத் தந்தார். ஆங்கில நாகரிகத்தை அகற்ற யாரும் அருகில் கூட வரவில்லை. நல்ல வேளை அவர்களே போய்விட்டார்கள். இல்லா விட்டால் விசயலட்சுமி பண்டிதருடைய மகள் இருவரும் இலங்கை முதலமைச்சருடன் நடனமாடத் தொடங்கியது போலத் தமிழ்ப் பெண்களும் ஆடத் தொடங்கினாலும் தொடங்கி விடுவார்கள். இன்னும் பல்லாண்டுகள் ஆங்கிலேயர் இந்நாட்டில் நிலைத்து

வாழ்ந்திருந்தால் அந்த நடன நாகரிகமும் பரவியிருக்கும். தமிழர் அதைமட்டுந்தான் பின்பற்றாது விட்டுவிட்டனர்.

இன்றைக்கு நாம் யாவரும் இந்த நாட்டு முடிசூடாமன்னர்கள். ஏனெனில் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று விட்டோம். ஆனால் வறுமையினின்று விடுதலை, வாழ்க்கைத்தர விடுதலை, அந்நிய நாகரிக விடுதலை, அருமைத்தாய்மொழிக்கு விடுதலை பெற்றோமா? எண்ணிப்பாருங்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை விடுதலையின் அறிகுறிகள் இன்னும் தென்பட வில்லை யெனலாம், ஆங்கில ஆட்சி போயிற்றே யொழிய வடவர் ஆட்சி வந்து கொண்டே இருக்கிறதே. தமிழர்கட்கு ஆங்கிலேயரும் வடவரும் ஒன்றுதான்.

ஏனென்றால் ஆங்கிலேயர் நாகரிகமும் நமது நாகரிகமும் மாறுபட்டவை. வடவர் நாகரிகமும் தமிழர் நாகரிகமும் வேறுபட்டவை. ஆங்கிலேயர் மொழியும் தமிழர் மொழியும் முரணானவை. வடவர் மொழியும் தமிழர் மொழியும் நேர்மாறானவை. ஒன்றுக்குஒன்று ஒவ்வாதன. வடவருடன் நாம்கலந்து வாழமுடியாது. ஆங்கிலேயர் ஆட்சியுடன் சில காலம் இருந்ததால் அவரது மொழி, நாகரிகம் நம்மிடைப் பரவியுள்ளதுபோலத்தான் வடவர்நாகரிகம் பரவித்தமிழர் நாகரிகம் தலைகீழாகிவிடும் தமிழர் வடவர் பிடிப்பினின்று விடுபட்டாலொழிய தமிழுக்கும், தமிழ் நாகரிகத்திற்கும் வாழ்வில்லை. ஒரு நாட்டில் பிறநாட்டு நாகரிகம் பரவ வாயிலாக உள்ளது மொழிதான் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே இந்தி என்ற மொழியை இந்தியப்பொது மொழியாக்கி வடவர் நாகரிகத்தை இந்தியா முழுவதும் பரப்பத் 'தில்லி' அரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது.

இதைத்தமிழர் பலர் அறிந்தும் அறியாதது போல் இருக்கின்றனர். தங்கள் பிழைப்பு கெட்டுவிடும் என்ற தயக்கம், நம்தமிழ்ப் பெரியார் ஓ.வி. அழகேசன் அவர்கள் (முன்னாள் இருப்புப் பாதைத் துணையமைச்சர்) தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்யத் தொடங்கினார். ஒரு முறை, ஒரு கூட்டத்தில் பேசும்போது "தமிழர்களுக்கு 'ழ' என்ற எழுத்து உச்சரிக்க முடியவில்லை. அந்த எழுத்தை நீக்கி விடலாம்," என்று அறிவுரை கூறினார்! 'ழ' போய்விட்டால் 'தமிழ்' இருக்குமா? என்று கடாவுகின்றேன். இன்னும் காந்தியடிகளும், சில வடநாட்டாரும் இந்தியாமுழுவதும் ஓரே எழுத்துமுறையை மேற்கொள்வது தான் நல்லது. ஆதலால் அதற்கு "நாகரிக லிபி" ஏற்றது என்று கூறினார்கள். நேருவினிடம் கூட அத்திட்டம் உளது. இந்தியை முதலில் எல்லாரையும் ஏற்கச் செய்து விட்டால் பிறகு மற்றவற்றைச் சிறிது சிறிதாகச் செய்து கொள்ளலாம் என்பதே வடவர் திட்டம்.

இந்தியைப் பொதுமொழியாக்குவதற்கு அவர்கள் கூறும் காரணங்களில் ஒன்று இந்தியைப் பொதுமொழியாக்கும்படி காந்தி கூறினார் என்பது காந்தியார் கூறியபடி மற்றவற்றைப் பின்பற்றுகிறார்களா? என்று கேட்கிறேன். இந்தியா விடுதலை பெற்றதும் "காங்கிரசைக்" கலைத்துவிடச் சொன்னாரே! செய்தார்களா? ஆங்கிலேயர் நம் நாட்டுச் செல்வத்தை ஆயிரக்கணக்கான ஊதியமாகத் தம் நாட்டுக்குக் கொண்டு போகிறார்கள் ஒரு ஆளுக்கு இருபத்தோராயிரம், ஐயாயிரம் ஊதியம் தேவையில்லை. காங்கிரசு ஆட்சியில் ஒருவர்க்கு ஐந்நூறு வெள்ளிக்குமேல் ஊதியம் கொடுக்கக்கூடாது என்று காங்கிரசுமாநாடு கராச்சியில் நிகழ்ந்தபோது தீர்மானம் நிறைவேற்றினாரே காந்தி—என்னவாயிற்று? இப்போதும் அதே கொள்ளைதானே அடிக்கிறார்கள்! ஏன்? அதைவிட மிகுதிஎன்றுகூடச் சொல்லலாம், ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பொருள் கடன்வாங்க நாடுதோறும் அலைகிறார்கள் பொதுமக்களிடம் போய்க் கையேந்தி நிற்கிறார்கள். தனிப்பட்டவர் நூறுயிரக் கணக்கில் அரசாங்கப் பணத்தை ஊதியமாகக் கொள்ளையடிப்பதை நிறுத்தமுற்பட்டார்களா? ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு ஆளுநர் (governor) நியமித்து அவர்கட்கு ஆண்டுதோறும் நூறுயிரக் கணக்கில் ஊதியமும் ஏனைய செலவுகளும் ஏன்? அவர்கட்கு ஏதாவது அலுவல் உண்டா? எங்காவது உண்டி விடுதி திறப்பு, சங்கத்திறப்பு, பால்த்திறப்பு இவற்றிற்குத்தானே போகிறார். இந்தத் திறப்புக்களைச் செய்ய இவ்வளவு பணம் பாழாக்கப்படுவானேன்?

மேலும், அந்நிய நாடுகளுக்குத் தூதுவர் அனுப்பியுள்ளார்களே அவர்கட்கு எவ்வளவு ஆடம்பரச் செலவுகள். கோடிக்கணக்கில் செலவு செய்கிறார்களே! சிறுசிறு நாடுகளுக்குக்கூடத் தூதர்ஏற்படுத்துகிறார்கள். பொதுமக்கள் பணந்தானே. தங்கள் ஆட்சி இருக்கும்வரை "அகப்பட்டதைச் சுருட்டடா ஆண்டியப்பா" என்ற நிலையில்தானே ஆட்சிநடத்துகிறார்கள்! காந்தியார் கூறியபடி காங்கிரசைக் கலைத்து விட்டால் அவர்கள் விடுதலைக்காகப் பட்ட பாட்டுக்குப் பயன் வேண்டாமா? அது போகட்டும். விடுதலைக்குப் போரிடத் தமிழர்களை அழைத்த போது, தமிழர்களிடம் என்ன சொல்லி ஏமாற்றினார்கள். தெரியுமா?

ஆங்கிலேயர் ஆட்சியை ஒழித்து இந்தியா விடுதலை பெற்றவுடன் மொழிவழிநாடு அமைத்துக் கொண்டு தன்னாட்சி புரிவோம் என்ற வடவர் இன்று ''தமிழ் மாநிலம்'' என்று பெயரிடவே மறுதலிக்கக் காரணம் என்ன? தமிழ்நாடு என்று பெயரிட்டுவிட்டால் தமிழர்கட்குத் தமிழ் உணர்ச்சி மேலிட்டுத் தனித்தமிழ்நாடும் கேட்பார்கள் என்ற அச்சமும், அதன் பிறகு இந்தி மொழியைப் பொதுமொழியாக்குவதில் இடையூறு நேரும் என்பதில் ஐயமும், ஒருமொழி ஒருநாடு என்ற தங்கள் கொள்கை நிறைவேறாது என்ற ஏக்கமுந்தான்.

தில்லியார் கையில் ஆட்சிப் பொறுப்பை ஆங்கிலேயர் ஒப்படைத்தவுடன் முதல் வேலை என்ன நடந்தது? அஞ்சல் அட்டைகளில் (Post Cards) முகவரி (Address) எழுதுகின்ற இடத்தில் கோடுகளுக்குமுன் இந்தியில் பெயர், ஊர், வட்டாரம், மாவட்டம் யாவும் எழுதிவிட்டனர். அதைப் பார்த்துத்தானே எல்லோரும் முகவரி எழுதுகின்றனர். ஆங்கிலேயர் தம்மொழியைப் பரப்ப இந்த முறையைக் கையாளவில்லை. பணக்கட்டளைத் தாட்கள் இந்தியில் அச்சிட்டு எங்கும் அனுப்பினர். நாடுமுழுவதும், சிறப்பாகத் தமிழ்நாட்டில், ''இந்திப் பிரியர்கள் சங்கமும், இந்தி பரப்பும் சங்கமும்'' ஏற்படுத்தினர். தமிழ் நாட்டு வானொலி நிலையங்களின் மூலம் இந்திப்பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்தனர். அஞ்சல் நிலையங்கள், இருப்புப் பாதை நிலையங்களின் பெயர்களையெல்லாம் இந்தியில் எழுதினர். ஊர்ப்பெயர் அஞ்சல் இலச்சினைகள் இந்தியில் மாமறியுள்ளனர், ஊர்க் கணக்குகள் இந்தியில் வைக்கப்பட வேண்டும் என்று கணக்குப்பிள்ளைகளுக்கு நெல்லை மாவட்டத்தில் பயிற்சி தொடங்கியுள்ளனர். நாணயத்தில் மாற்றம்செய்து ஒரு வெண்பொற்காசுக்கு நூறுபுதுக்காசு (நயே பைசே) என்று இந்திப் பெயரிட்டனர். மைய அரசியலில் அலுவல் உயர்வு பெறவிழைவோர் இந்தி தெரிந்திருக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்துள்ளனர். அரசாங்க அலுவல் பார்ப்பவர்கள் யாவரும் கூடிய விரைவில் இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்றும், அலுவலக வேலை தொடங்கு முன்பே ஒரு மணி நேரம் இந்தி வகுப்புகள் நடைபெறுமென்றும் அறிவித்துள்ளனர்.

வானொலி என்று தூய தமிழில் இருந்ததைவிட்டு ஆகாஷ்வாணி என்றுகூறுகின்றனர் உண்ணாநோன்பு இருந்த இளவழகன், அரங்கரத்தினம் பற்றி மைய அரசு வாய் திறந்திலது. சென்னை அரசினரின் வேண்டுகோட்கட்கு இணங்கி வானொலி என்ற சொல்லையும் சேர்த்துக் கூறினர். இப்போது வானொலி வழங்கவில்லை. அதற்கு மேலும் வணக்கத்தைவிட்டு நமஸ்காரம் என்றும், ஜெய்ஹிந்த் என்றும், சகசகாப்தம் என்றும் நாளுக்குநாள் இந்திச் சொற்களை மிகுதியாக்கிக்கொண்டே போகிறார்கள். தமிழர்களின் வேண்டுகோட்குத் தில்லி அரசினர் செவி சாய்த்திலர்.

1960 – 61 முதல் உயர்நிலைப் பள்ளிகளில் பாடத்திட்டம் மாற்றப்பட்டுள்ளது. ஆறும் வகுப்பு முதல் எல்லா மாணவர்களும் மூன்று மொழி கற்க வேண்டுமாம். தமிழில் சிறப்புப் பகுதியை நீக்கிவிட்டார்கள். அதன் பிறகு தமிழுக்கு ஆறுயிட வேளைகளே. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ், ஆங்கிலம், தாய்மொழி தவிர்த்த வேறு ஒரு இந்திய மொழி கற்கவேண்டுமாம். இதில் வேறு ஏதாவது இந்திய மொழிக்குள்தான் சூழ்ச்சி இருக்கிறது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் துளுவம் இவற்றைக் கற்கலாமென்றால் பள்ளிகளில் அவற்றிற்கு ஆசிரியர் இல்லை. இந்தி ஆசிரியர்தான் இப்போது ஒவ்வொரு உயர்பள்ளியிலும் உளர். மேலும் பிறமொழி கற்றால் அரசியல் அலுவலுக்குப் பயன்படாது. இந்தி கற்றால் அரசாங்க அலுவல் கிடைக்கும். பின்னால் பொதுமொழியாக வர இருப்பதும் அதுதானே. ஆகவே பொதுமக்கள் இந்தியைத்தான் விரும்பிக் கற்பார்கள் என்பதே அவர்கள் திட்டம். மற்ற மாநிலங்களில் இந்தியைக் கட்டாய மாக்கிப் பயின்று வர இசைந்து விட்டனர். தமிழ்நாட்டில் தான் எதிர்ப்பு இருக்கிறது என்று கருதுகின்ற காரணத்தால் கட்டாயமில்லை, என்றுகூறிக்கொண்டு உரித்த வாழைப்பழத்தில் ஊசியேற்றுவதுபோல் இந்தியைப் புகுத்தி வருகின்றனர்.

பஞ்சாப், வங்காளம், அசாம், பம்பாய் முதலிய மாநிலத்திலுள்ளவர் இந்தியை ஏற்க விரும்பாது விடுதலைபெற விழைகின்றனர். அதுபோன்றே தமிழர்கள் வடவர் கூறும் ''இந்தி கட்டாயமில்லை'' என்ற சொல்லை நம்பி ஏமாறக்கூடாது. இந்தி தமிழ் நாட்டில் புகுந்தால் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற பெயர்கள் ஒழிந்துபோகும். தமிழன் என்னும் இனம் பூண்டற்றுவிடும். தமிழ்வாழ; தமிழினம் வாழ; தமிழ் நாகரிகம் வாழ; தமிழர் யாவரும் கட்சிப் பாகுபாடின்றித் தமிழ்நாட்டு விடுதலைக்காவது ஒன்றுபடுவார்களா?

நீ வேண்டாம்!

இலவுகாத்த கிளியானேன் நானே - அவன்
என்னைத்தெருவில் விட்டுச்சென்றிட் டானே
நிலையாக நம்பியிருந் தேனே - அவன்
நினைத்ததைநான் அறியவில்லை மானே!

தலையில்அடித் தான்மணப்பேன் என்று - "நீ
தமக்கைமகளே" எனப்பு கன்று
குலையில்அடித் தான்பாவி இன்று - கருங்
குரங்கிடத்தில் அன்புவைத்தான் சென்று!

தேனிருக்க வேம்புகொள்ள லாமா? - என்னைத்
திகைக்கவிட்டா யோஅருமை மாமா!
நானிருக்க அவளைஎண்ண லாமா? - என்னை
நலியவிட்டா யோஅருமை மாமா!

நானிப்படி கேட்டேனடி கெஞ்சி - அவன்
நவின்றமொழி கேளடிஎன் வஞ்சி:
"யானெழுதும் அஞ்சலையும் மிஞ்சி - பள்ளி
ஏகவில்லை நீசிறுநெ ருஞ்சி

உருவணக்கம் தரும்உனக்கே இன்பம் - வே
றொருவனைஏன் மணக்க வேண்டும் பின்பும்?
திருமாலின் சிவனாரின் முன்பும் - நீ
செங்கைகூப்ப வாய்த்ததாஉன் அன்பும்?

வரும்பார்ப்பைச் சாமிஎன் றழைத்தாய் - உன்
மாண்குடியும் நாணமுற வைத்தாய்
பெரியாரின் நன்னெறிப ழித்தாய் - தமிழ்ப்
பெருநாட்டின் பெருமையைக்கு லைத்தாய்!

அன்புள்ள ஐயா!

ஆரியர் காலத்திற்கேற்ற கோலம் கொண்டவர்கள். அவர்கள் இந்நாட்டில் புகுத்திய மூடநம்பிக்கைகள் யாவும் தன்னலத்திற்காகவே, ஆனால் காலத்திற்கேற்ப தங்களுக்குள் அம்மூட நம்பிக்கைகளை விட்டு விட்டார்கள். நம்மவர்கள் மட்டும் ஏனோ அதை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு நமது சமுதாயத்தின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லா யிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு காட்சி- என் பெயர் முருகன். நான் ஒரு நடுத்தர குடும்பத்தினன் ,என் பெற்றோர்கள் பழமை விரும்பிகள். ஆரியர்களின் நச்சுப் பொய்கையில் மூழ்கிவிட்டவர்கள். அன்று சூரிய கிரகணம், இராகு, கேது என்ற பாம்புகள் இரவியை காலை ஏழரை மணிக்குப் பிடித்து ஒன்பதே முக்காலுக்கு விடுகிறது. என்று பஞ்சாங்கம் எழுதும் எங்கள் பக்கத்து வீட்டு பாண்டுரங்க அய்யர் கூறினார். நான் ஒரு அலுவலகத்தில் வேலை பார்ப்பவன் பாண்டுரங்க அயபரின் மகனும் என்னுடன் அதே அலுவலகத்தில் வேலை பார்க்கிறான். எங்கள் இருவரையும் அன்று காலை ஒன்பது மணிக்கே அலுவலகத்துக்கு வரச்சொன்னார் எங்கள் தலைமை அதிகாரி. நாங்களும் சரிஎன்று சொல்லி விட்டு வந்தோம். அன்று காலையில் என் தாயார் எனக்கொரு கட்டளையிட்டார்கள். •அதாவது என்னுடைய குளியல் முதலாயின எல்லாம் காலை ஒன்பதேமுக்காலுக்கு மேல்தான் செய்ய வேண்டும், நான் காரணத்தைக் கூறி மறுத்தேன். என் தாயோ பிடிவாதக்காரி மேலும் மறுக்க அஞ்சி வாளாவிருந்தேன், பின்னர் என் தாயார் பாண்டுரங்க அய்யரின் வீட்டை அடையும்பொழுது மணி எட்டரை இருக்கும். அப்பொழுதுதான் அய்யரின் மூத்தமகன் சாப்பிட்டுவிட்டு அலுவலகத்திற்கு கிளம்ப உடைதரித்துக் கொண்டிருந்தான். நான் குழப்பமடைந்தேன். நான் தர்ப்பை வேண்டுமென்றபொழுது ஒருசிறிய புன் முறுவலுடன் தர்ப்பையைத் தந்தான். தமிழக நிலையை உன்ன உன்ன எனது உள்ளம் நைந்தது. இது போன்ற காட்சிகள் இன்னும் பல இடங்களில் உள்ளன. இந்தக் காட்சிகள் ஒழியவேண்டுமானால் ஆரியர்கள் அழியவேண்டு. ஐயோ! சொந்த நாட்டான் சோறின்றி மாள்கிறான் வந்தவனோ வாழ்கிறான். இந்த நிலை ஏன்? செந்தமிழ் நாட்டீரே! சிந்தித்துப் பாருங்கள். ஆரியர்கள் தாங்கள்வாழ அன்றுஇவைகளை ஏற்படுத்தினார்கள். இன்று அவசியமில்லை என்றுணர்ந்ததும் அகற்றி விட்டார்கள் நாம் வாழ வேண்டுமானால் இதுபோன்ற மூடப்பழக்கங்கள் மாளவேண்டும். மூடப்பழக்கங்கள் மாளவேண்டுமானால் வெண்தாடி வேந்தர், சிறைக்கஞ்சாச் சிங்கம், தமிழர்களின் தன்னிகரில்லாதத் தலைவர், பழைய வழக்கங்களின் பரம விரோதி பெரியாரின் வழியைப்பின்பற்றவேண்டும். வந்தேறிகள் வாழ்வதா? சொந்த நாட்டான் மாள்வதா? இரண்டிலொன்று, விரைவில் முடிவு செய்யுங்கள் காலம் வீணாகின்றது.

வடக்குப்பட்டி
கஉ-கஉ-ககூகூய
} வெ. நடராசன்

திருவளர்
வெற்றிச்செல்வி - வேங்கடாசலன்
திருமணச் சிறப்பு

(அகவல்)

நற்றமிழ் பயின்ற "வெற்றிக்கொடி" எனும்
பாவை, ஆநந்தப் படையாட்சி யான
குறுநில மன்னரின் பேர்த்தி, குறைவிலாச்
செக்கடிப் பட்டித் திருமலி இராமச்
சந்திரன் தவத்தில் வந்த புதல்வி,

கொட்ட வாடிக் கொற்றவ னிகர்த்த
பூமாலைப்படை யாட்சி புதல்வன்
மேன்மைக் குணமுறும் வேங்கடா சலன்,

இருவர் தாமும் திருமணம் பெற்றனர்!
இந்தத் திருமணம் செந்தமிழ் நாட்டின்
தலைவர் பெரியார் தலைமையில் நடந்ததால்
அதன் சிறப்பை அறையவும் வேண்டுமோ!

மணவறை யதனில் மணமக்கள் தமக்குப்
பாரதி தாசனார் வாழ்த்துரை பகர்ந்தனர்
புலவர் ஏறு பொன்னம் பலனார்,
ஏந்து புகழ்ச்சாந் தாநந்தம் முதலியோர்
வாழ்த்துரை வழங்கி மகிழ்ந்தனர்
பல்லா யிரவர் மக்கள்
நல்லுரை நவின்றனர்! மணமக்கள் வாழ்கவே!

"பேராசைகொண்டவன் பார்ப்பான்" புகல்கிறுன் கம்பன்!

தஞ்சை. மருதவாணன்.

வல்லூறும், வண்ணப்புருவும், புள்ளினத்தைச் சேர்ந்தனவாயினும் இயற்கையமைப்பாலே இருவேறு நீர்மையன. முன்னது வஞ்சமாய்ப் பறித்துண்ணும் பான்மையது. பின்னது எழில் காட்டி நிற்கும் மென்மைப் பாங்குடையது. அதுபோலவே பார்ப்பனனும், தமிழனும் 'மனித' இனத்தைச் சேர்ந்தோராயினும், இயற்கையமைப்பால் இருவேறு இயல்பினர். இது முற்கால - பிற்கால வரலாற்று அறிஞர்களின் முடிவு மட்டுமன்றி: நிகழ்காலத்தில் நேரில் உணரும் உண்மை கூட.

அதனுற்றுனே, "சிறுத்தை தன் புள்ளியை மாற்றினுலும் மாற்றிக்கொள்ளும். ஆனல் பார்ப்பான் தன் குணத்தை மாற்ற மாட்டான்" என்று கூறினர் நீதிக்கட்சி அறிஞர்! அதனுற்றுனே, "பார்ப்பனர் இரட்டை நாக்குப் படைத்தவர்கள்; நயவஞ்சகர்; பேராசைக்காரர்" என்றுர் அபேடுபாய்! பார்ப்பான் பெறுதி (இலாபம்) கருதி எவ்விழிநிலைக்கும் உடன்படுவான்; தமிழன் இறுதி நேர்வதாயினும் நிலை பெயரான். பொருளிரக்கப் பல்லிளிப்பான் ஆரியன். "தானம் வாங்கிடக் கூசிடுவான்; தருவது மேலெனப் பேசிடுவான்." தமிழன்! "பேராசைக்காரனடா பார்ப்பான் அவன், பெரியதுரை என்னில் உடல் வேர்ப்பான்" என்ற பாரதியின் கூற்று ஈண்டு நோக்கற்பாலது.

மேற்குறித்தனவற்றையெல்லாம் விட நுணுகி நோக்கத்தக்கது என்னவென்ருல், கம்பனே தனது 'இராமகாதை' யில் பார்ப்பனர்களைப்பற்றி இழிவாகக் குறிப்பிட்டிருப்பதுதான்! தமிழக மன்னர்களின் வரலாறுகள் பல இருக்கவும், அவற்றை விடுத்து ஆரிய மைந்தனின் கதையை எழுதிய ஆரிய அடிமையான கம்பனே ஆரியரின் தீக்குணங்கண்டு வெறுப்புரை பகர்ந்திருக்கிறுன்.

இராம காதையில், இராமதூதனை அனுமான் சீதையைப் பல விடங்களிலும் தேடியதைச் சித்தரித்துவிட்டு இறுதியில் அசோக வனத்தில் சீதையைக் கண்டதையும் விளக்குகிறுன் கம்பன். சீதை அவிழ்ந்தகுழலும், கவிழ்ந்த முகமுமாகக் காட்சியளிக்கிருள். துயரமே உருவான சீதை இறந்தகால நிகழ்ச்சிகளை எண்ணி ஏங்குகிருள். இராமனுடன் தான் இருந்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஒவ்வொன்ருக, நினைத்து - நினைத்து வருந்துகிருள். அவ்வித நிகழ்ச்சிகளுள் ஒன்ருக இராமன் பார்ப்பனர்க்குத் தானம் கொடுத்ததையும் நினைத்து வருந்துகிருள். இங்கே கம்பன் தன் கைவரிசையைக் காட்டுகிருன்!

"பரித்த செல்வமொழியப் படரு நாள்
அருத்தி வேதியர்க்(கு) ஆண்குலம் ஈந்தவர்
கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டிறை
சிரித்த செய்கை நினைத்தழும் செய்கையாள்"

[கம்பராமாயணம். காட்சிப்படலம், பாடல் உசு]

இராமன் காடேகும் நேரத்தில், அயோத்தி நகரமே அழுதது! மகளிர் நீர் மல்கும் கண்களுடையவர் ஆயினர், அந்த நேரத்தில்கூடப் பார்ப்பனர் துயருறவில்லை. பின் என்ன செய்தனர்? காடேகுவதற்குத் தயாராக நிற்கும் இராமனிடஞ் சென்று "இராமா! தானங்கொடு!" என்று பிச்சை கேட்டனர், இந்தப் பேடிகள்! காடேகும் நேரத்தில் கூடக் கண்ணீர் மல்காது இரந்திட்ட கரையற்ற ஆசைகண்டு ஆரியஇராமனே சிரித்தான்! இராமனு சிரித்தான்? கதைத் தலைவனுகிய இராமன் என்னும் படைப்பின் உள்ளேபுகுந்து கம்பனன்றே சிரித்தான்? "அட ஆசைக்கோர் அளவில்லாதவனே? கானகம் படரும் காலையிலும் கழிவிரக்கமின்றி, கைநீட்டியிரந்திட்ட கசடனே!' என்று மனதுத்துள் எண்ணி அதனை ஒரு சிரிப்பின் மூலம் இராமன் வெளியிட்டதாகக் கம்பன் கூறுகிருன்! "கருத்தின் ஆசைக் கரையின்மை கண்டு இறை (இராமன்) சிரித்த செய்கை" என்ற தொடரை நோக்குக! 'அருத்தி வேதியர்' என்று அடைமொழிவேறு வழங்கியிருக்கிருன் கம்பன்! தீக்குணங்கொண்ட இம்மாக்களுக்குக் கம்பன் கொடுத்த இவ்வடைமொழி சாலவும் பொருந்தும் என்பதில் ஐயமென்ன?

வாழ்க பெரியார் ! தமிழ்நாடு தமிழருக்கே!! ஒழிகசாதி!!!

வடநாட்டில் தன்மானக் கொள்கையினை நன்கனம் பரப்பி
வாகை சூடித் திரும்பிய

தந்தை பெரியார் அவர்கள்

பெரம்பலூருக்கு 20-3-1959 ஆம் நாள்
வருகை நல்கிய பொழுது அவரைப் பாராட்டுமுகத்தான்
பெரம்பலூர் வட்ட திராவிடர் கழகத்தினர் படித்தளித்த

வ ர வே ற் பி த ழ்

வருக பெரியார் அவர்களே ! மாண்புசால் நும்முடைய
வருகையால் கார்முகில் கண்டு களித்திடு மாமயிலின்
பெரும்புலி யூர்வட்ட மக்கள்யாம் நின்னரும் பேருரையை
பெருந்திர ளாக எழுந்துளோம் கேட்க பெரிதுவந்தே !

தமிழர் தலைவரே! தன்மானத் தந்தையே தண்பொழில்சூழ்
தமிழ்நாடு தன்னுட்சி யெய்த உழைப்போய்! தகுமுறையில்
தமிழ்மொழிக் கின்னல் விளைக்கும் பகைமை தகர்த்தெறிந்து
தமிழர் நலம்பேணும் சான்றோய்! வருக தகவுறவே!

வடநாட்டு மாநக ரெங்கும் உலாவந்தீர் மக்களெல்லாம்
கடல்போல் திரண்டுளம் கொண்டனர் உன்றன் கருத்துரையை
“நடந்திடு பார்ப்பானே இந்தியா விட்”டென்ற நன்முழக்கம்
கடலொலி பிற்படச் செய்தனர் உள்ளம் களிகொளவே!

இந்திய நாட்டுள தாழ்ந்தவர் பிற்பட்டோர் ஏற்றமுற
சிந்தை மகிழ்ந்து தலைமை வகிப்பீர்; சிறந்திடுநல்
நுந்தம் நெறிநிற்போம்; உண்மையாய்” என்றே நுவன்றனரால்
இந்திய நாட்டின் குடியர சுக்கட்சி இன்புறவே!

இலக்கு மணபுரி மாணவர் மன்னிப்பை ஏற்றுவந்து
நலமுடன் நேருபந்த் மாநிலங் தன்னில் நலிவுதீர
“விலகுவீர் இந்திய ஆட்சிப் பிடியை விடுத்”தெனவே
வலனுயர் சொற்பெருக் காற்றிக் கவர்ந்தனை மக்களையே !

அட்டைபோல் ஆட்சியில் ஒட்டிநம் வாழ்வை யழித்திடுவோர்
கெட்ட மதியினர் பார்ப்பான் ஆதிக்கம் கேடுறுவான்
கிட்டி வடக்கின் எதிர்ப்புத் திறன்கள் கிளர்ந்தெழவே
தட்டி எழுப்பினீர் தாளாண்மை குனருத் தலைவரேறே!

வாழ்க பெரியார் வளர்க்கும் திராவிடர் நற்கழகம்
வாழ்க பெரியாரின் கொள்கை வளர்ந்தோங்கி மாநிலத்தில்
வாழ்க பெரியார் வளர்புகழ் மென்மேலும் வானுயர்ந்து
வாழ்க பெரியார் நலமுடன் என்றென்றும் மன்னுகவே !

இங்ஙனம்,

பெரம்பலூர் வட்ட திராவிட கழகத்தினர்.

சென்ற இதழ்த் தொடர்ச்சி:-

நச்சினார்க்கினியரின் ஈதல் விளக்கம்

—: கயல்விழி :—

வேதம் ஓதுபவர்கள் கலைவல்லுனர்களா? அவர்களிடம் ஆடல் அமைதியும், பாடல் திறமும் இருந்தனவா? அல்லது அவர்கள் ஒன்றுமற்ற ஏழைகளா? பின் ஏன் அரசரிடத்தும் பிறரிடத்தும் ஏற்றல் (பிச்சை எடுத்தல்) வேண்டும். ஆடல் வல்லவன் ஆடலைக்காட்டிப் பரிசு பெறுகிறான். பாடல் வல்லார் பாமழை பொழிந்து செவிக்குத் தேனூட்டிப் பரிசு பெறுகின்றனர். ஒன்றுமற்ற ஏழைகள் பல்லெல்லாம் தெரியக்காட்டிப் பருவிரல் முகத்தில் கூட்டி சொல்லெல்லாம் சொல்லி நாட்டிப் பிச்சைஎடுக்கின்றனர். ஆனால் இந்த வேதம் ஓதும் வகுப்பார் எம்முறையில் ஏற்கின்றனர்?

பிறரது அறிவை மாய்த்துப் பித்தலாட்டத்தால் வேள்வி என்ற ஒன்றைக் காட்டி ஏற்கின்றனர். அவ்வாறு அவர்களுக்கு ஈயும் பொருள் என்னதாக இருக்கவேண்டும்? இதோ கூறுகிறார் நச்சினார்க்கினியர்.

" கலிங்கங் கழுத்து யாத்துக் குளம்புங் கோடும் பொன்னணிந்த புனிற்றுநிரையும், கனகமும், கமுகு முதலியனவும் அன்னமும் செறிந்த படப்பைசூழ்ந்த மனையும் தண்ணடையும் கன்னியரும் பிறவுங் கொடுத்தலும் மழுவாணெடியோன் ஒப்ப உலகு முதலியன கொடுத்தலும் போல்வன அவர்க்குரிய ஈதலாம். " (தொல்காப்பியம்-பு. இயல். பக்: உகங)

நல்ல விலையுயர்ந்த ஆடையை அந்தப் பார்ப்பனனின் கழுத்தில் அணிவிக்க வேண்டுமாம். பொன்னணிந்த பசுக்கூட்டம் ஒன்றையே அவனுக்கு ஈதல் வேண்டுமாம். மேலும் பொன் கொடுக்க வேண்டும். ஒரு வீடு கொடுத்தல் வேண்டும். அந்த வீடு எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும். சுற்றிலும் கமுகு மரம் நிறைந்ததாகவும் அங்கு மான் தங்கி மகிழும் இயல்பினதாகவும் இருக்க வேண்டுமாம். இவ்வளவு போதுமா? நல்ல நன்செய் நிலம் கொடுக்க வேண்டும். மேலும் கன்னி ஒருத்தியையும் அவனுக்குக் கொடுக்க வேண்டுமாம். இவ்வளவு பெற்றதுடன் போதும் என்று அமையவில்லை. இந்த உலகையே தன் ஆற்றலால் வெற்றிபெற்று அவனிடம் கொடுக்கவேண்டுமாம். உலகு முதலியன என்று கூறியுள்ளார் நச்சினார்க்கினியர். அந்த முதலியன என்பதில் சந்திரமண்டலத்திற்கு இனிச்சென்று அதையும் அந்தப் பார்ப்பனனிடம் கொடுத்தல் வேண்டும் என்னும்பொருள்அதில்அடங்கியுள்ளது.

" பேராசைக் காரனடா பார்ப்பான் " என்று இவ்வளவு குறுகிய வார்த்தைகளில் அவனிடமுள்ள பேராசைத் தன்மையின் நிறைவைக் காட்டியதாகக் கருதமுடியாது. பேராசைக்கு நல்லதொரு விளக்கம் இவ்வுலகில் எவனாவது திறம்படக்கொடுப்பானாகில் அந்த அளவுக்குப் பேராசையுள்ளம் கொண்டவன் இப்பார்ப்பனன் என்று அப்பொழுதுதான் நாம் கொஞ்சம் தயங்கி (முழுநிறைவுடன் அல்ல) ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் பார்ப்பான் பெரிய காமுகன் என்பதற்கு "கன்னி ஒருத்தியையும் ஈதல் வேண்டும்" என்ற தொடரிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

எந்த நல்லதொரு எண்ணத்தின் அடிப்படையில் தோன்றிய ஈதல் எம்முறையில் நச்சினார்க்கினியரால் பாதை திருப்பிவிடப் பட்டுள்ளது. என்பதை நோக்குக.

பாணர் விறலியர் பிறர் கொடுப்ப அது பெற்று வாழும் வாழ்க்கையினர். பார்ப்பனனும் பிறர் கொடுக்க அது பெற்று வாழ்பவன் என்று கருதப் படுகிறான். இவ்வாறு இருவரும் பிறரிடம் பெற்று வாழும் தன்மையரேனும் பார்ப்பனனுக்கு இன்னின்ன முறையில் இன்னின்னவற்றை ஈதல் வேண்டுமென்று விதியும் வரம்பும் கூறிய பார்ப்பன உரையாசிரியர்கள் இலக்கியங்களில் குறுக்கிடுகின்ற பாணர் விறலியர்கட்கு மட்டும் இன்ன பொருள்களை இந்த முறையில் ஈதல் வேண்டுமென ஏன் விளக்கம் கொடுக்கவில்லை?

இவ்வாறு ஒப்ப நோக்கிக்காணுகின்ற பொழுது தெரிகின்ற வேற்றுமையால் பாணர், விறலியர், புலவர் ஆகியவர்கட்குக் கொடுப்பது இயல்பு என்பதும் பார்ப்பனனுக்குக் கொடுத்தல் மரபல்ல என்பதும், பார்ப்பனர்களும் பாணர் விறலியர் பெறும் பொருள்களைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாகவே பார்ப்பனனுக்கு இன்னின்னவற்றை ஈதல் வேண்டுமென்று உரையாசிரியர்களால் வலிந்து புகுத்தப்பட்டது என்பதும் வெள்ளிடைமலையெனத் தெள்ளிதின் விளங்குகிறது.

இவ்வாறு நச்சினார்க்கினியர் போன்றவர்களால் புகுத்தப்பட்ட இக்கருத்துக்கள் நாளடைவில் மக்கள் மதிப்பைப் பெற்று அது மக்களின் உள்ளத்தில் மா பெரும் மாறுபாட்டை உண்டாக்கி இருக்கிறது. கீழ் வரும் எடுத்துக்காட்டைக் கொண்டு அதன் விளைவை எண்ணுக.

சற்றேறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன் தஞ்சையை ஆண்ட மன்னர் ஒருவர் விரதம் கடைப் பிடிக்கும் வழக்கம் உள்ளவராக இருந்தார். அன்று மட்டும் அவர் வெற்றிலை இட்டுக் கொள்வதில்லை யாம். ஆயின் ஒரு நாள் விரதத்தன்று, விரதம் என்பதை மறந்து வெற்றிலை இட்டுக் கொண்டு விட்டாராம்.

எதிர்பாராத வகையில் விரதத்திற்கு ஊறு நேர்ந்ததை அறிந்த அரசர் மிக வருந்தி அதற்குக் கழுவாயாக என்ன செய்வது என எண்ணுகையில் அங்குள்ளோர் "ஓர் அக்ரகாரப் பிரதிஷ்டை செய்து வீடுகள் கட்டி வேத வித்துக்களாகிய (?) அந்தணர்களுக்கு அவ்வீடுகளோடு பூமியையும் தானம் செய்தால் இந்தத் தோஷம் நீங்கும் என்றார்கள். அவர்கள் கூறியதைக்கேட்ட அரசர் 'இதுதான பிரமாதம்; அப்படியே செய்து விடுவோம்' என்று கூறி ஒரு அக்ரகாரத்தை அமைக்க ஏற்பாடு செய்தார். அதில் நாற்பத்தெட்டு வீடுகளைக் கட்டி இரண்டு வீடுகளுக்கு ஒரு கிணறாக இருபத்து நான்கு கிணறுகளையும் அமைக்கச் செய்தார். வேதாத்தியயனம் செய்த நாற்பத்தெட்டு பிராமணர்களை அருகிலும் தூரத்திலும் உள்ள ஊர்களிலிருந்து வருவித்து அந்த வீடுகளையும் ஒவ்வொருவருக்கும் பன்னிரண்டு மா நன்செயும் அதற்குரிய புன்செயுமாகிய நிலத்தையும் தானம் செய்தார் அந்த உத்தமமான தானப் பொருளாக அமைந்தமையாக உத்தமதானபுரம் என்னும் பெயர் வழங்கலாயிற்று."

இது என்னுடைய சொந்தக் கற்பனை அல்ல. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் 'என் சரித்திரம்' என்னும் தன் வாழ்க்கை நூலின் இரண்டாம் பக்கத்தில் எழுதியுள்ளவை.

நச்சினார்க்கினியரின் ஈதல் விளக்கத்துடன் மேற்கண்ட நிகழ்ச்சியை மருங்குவைத்து ஒருங்கு நோக்கி ஒப்புக் காணின் நமக்கு என்ன தெரிகிறது? எந்த நல்லதொரு அடிப்படையில் எழுந்த ஈதல் நச்சினார்க்கினியர் போன்றவரால் பாதை திருப்பி விடப்பட்டு எந்த அளவுக்கு மாறியுள்ளது என்பதை எண்ணுங்கள், பாணருக்கும் புலவருக்கும் விறலியருக்கும் அளிக்கப்பட வேண்டிய ஈதல் பார்ப்பனனுக்கும் பார்ப்பனனுடன் தொடர்புபட்ட வேதமோதுதலுக்கும் திரும்பியது யாரால்? நச்சினார்க்கினியர்போன்றவரால் என்பதை மறுக்க ஒல்லுமோ?

மேலும் தமிழ் நாட்டில் பாணர் இனமும் விறலியர் இனமும் பூண்டோடு அழிந்து ஒழிவதற்கு ஒரு காரணம் உண்டெனில் அது பார்ப்பனரின் சூழ்ச்சியே என்று கூறலாம். ஈதலை நம்பியே உயிர் வாழ்ந்த அந்தஇனம் தனக்கு அளிக்கப்படும் பொருளையும் பிறவற்றையும் அடைய முடியாதபடி பார்ப்பனரின் சதிவேலைக்கு ஆட்பட்டு மடிந்திருக்கிறது. அந்த இனத்தின் பிணத்தின் மேல் இது தன் உல்லாசக் கோட்டையைக் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நச்சினார்க்கினியர் நல்லபல தமிழ் இலக்கியங்கட்கு உரை எழுதி தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த பெருந்தகை என்று போற்றலாம். ஆனால் அவரும் அவரைப் போன்றவரும் பாதை திருப்பி விட்டதால் தமிழ் நாட்டுக் கலையுலகப் புகழ் மணிகளது பெரிய இனம்ஒன்றே கண்ணீர்விட்டுக் கதறிக் கதறி வெந்துப் புழுங்கி உயிரை மாய்த்திருக்கிறது. இப்பொழுது கூறுங்கள் நச்சினார்க்கினியர் நல்லுள்ளம் கொண்டவரா? அன்றி நச்சுள்ளம் கொண்டவரா? என்று.

விற்பனையாளர்க்கு...

பட்டியல் பாக்கியை உடனடியாக அனுப்புமாறு பலமுறை அறிவித்தும் இதுவரை அனுப்பாதிருக்கும் விற்பனையாளர்கள் இம்மாத முடிவுக்குள் அத்தொகையை அனுப்பிவிட வேண்டும். அப்படி அனுப்பாதவர்கள்மேல் வழக்குமன்றம் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நினைவுறுத்துகிறோம்...!

இயற்பெயரோ, புனைபெயரோ இன்றி வெளியிடப்பெறும் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்படுபவையே.

—அமைச்சர்.

தில்லி திடுக்கிடும் நாள்!

ஆட்டுக்காரனார். இரா. சுந்தரம்

புகழ்பூத்து வாழ்ந்த தமிழர் தம் பொன்னாடு இன்று – போனோர் வந்தோர்க்கெல்லாம் பொழுது போக்கும் சத்திரமாகிவிட்டது வருவோர்க்குக் குறைவில்லை; அவர்கள் வாரிச்செல்வதும் ஓயவில்லை. இதுதானே இன்றைய தமிழகத்தின் இழிநிலை!

பக்கத்திலே பாக்கிஸ்தானும்; அது பகலும் இரவும் குண்டுகளைப் போட்டுத் தொலைக்கிறதாம் இந்திய நாட்டின் எல்லையில். அங்கே கையிழந்தவனுக்கு இங்குள்ளவன் பையவிழ்க்கவேண்டுமாம். அங்கே காலிழந்தவடவனுக்கு இங்குள்ளத்தமிழச்சி தாலியிழக்க வேண்டுமாம் – என்ன ஒற்றுமை!

இலங்கையிலே இன்னலுற்றோர் தமிழர். அங்கே தமிழர் வீடுகளுக்கும் கடைகளுக்கும் நெருப்பு வைக்கப்பட்டதாம். மானத்திற்காக உயிர் வாழும் தமிழச்சிகளின் கற்பு அங்கே பறிபோயிற்றாம், காணாத நேருவுக்குத் தமிழர் செய்தி தெரிவித்தனர். நேரு மகான் அதைக்கேட்டுவிட்டு நெஞ்சு நெக்குருகி நாடிழந்து ஓடிவந்தோர்க்கு நல்லாதரவு கொடுக்கவில்லை. அனுதாபத்தைக்கூட காட்டிக் கொள்ளவில்லை. நாக்கூசாமல் கூறினாராம் நமக்கும் அவர்களுக்கும் சம்பந்தமில்லை என்று. இதில் தான் என்ன வேற்றுமை!

அண்டையிலிருக்கும் பாகிஸ்தானில் அனுமதியில்லாமல் நேருவால் நுழையமுடியுமா? தாழ்ப்பாள் இல்லாத வீட்டில் நாய் நுழைவதைப் போல கேட்பார் இல்லையே என்ற காரணத்தால் நேரு நினைத்தபோதெல்லாம் நுழைகிறார் தமிழகத்தில். வீட்டில் புகுந்த நாய் வாலை ஆட்டாமல் வாய்க்குக் கிடைத்ததைக் கௌவிக்கொண்டு சென்றால் போதாதா? குரைத்துவிட்டும் செல்கிறது கொட்டத்தோடு! நேரு தமிழகத்திற்கு வந்தபோதெல்லாம் தலைவர்களைத் திட்டாமல் திரும்பிச் செல்வதில்லை ஏன்? தமிழர்க்குத் தனிநாடு, தனித்தபடை இருந்தால் நேருவால் இப்படி நினைத்தபோதெல்லாம் திட்டமுடியுமா?

ஆண்டிருந்த தமிழன் இன்று ஆண்டியாகி விட்டான்; அவன் நமக்கு அடிமைதானே என்ற ஆணவம் கொண்ட நேருவின் நாவடங்க வேண்டும். கொட்டித் துன்புறுத்திக் கொட்டம் அடிக்கும் தில்லியின் தொடர்பிலிருந்து தமிழ் நாட்டை வெட்டிப் பிரிக்க வேண்டும். இங்கு மூட்டிய படஎரிப்புத்தீ தில்லியின் திமிரைச் சுட்டெரிக்க வேண்டும். எழுப்பப் படும் தீயில் இந்தி மொழி வெறியர்களின் ஏகாதிபத்தியம் எரிந்து சாம்பலாக வேண்டும். அந்த நாள் தான் இந்தியப் படஎரிப்பு நாள்! தில்லி திடுக்கிடும் நாள்! ★

நெறியறிந்து வரி...!

அதை உணவாக்கிக் கொடுத்து வந்தால்; அது பல நாளைக்கு அந்த யானைக்குப் போதுமானதாக இருக்கும். ஆனால் நூறு காணி நிலமாயினும் யானை, தானே நுழைந்து உண்ணத் தொடங்கினால் என்ன நேரும்? அது உண்ணும் நெல்லைவிட அழிப்பது தானே அதிகமாக இருக்கும்? இதனை வேந்தர்கள் அறியவேண்டும். அறிவுடைய வேந்தன் நெறியறிந்து நேர்மையாக வரி வாங்கினால் அவனது நாடு கோடிப் பொருள்களைத் திரட்டிக் கொடுப்பதோடு தானும் தழைத்தோங்கும். நெறி தவறியவனாய் கல்நெஞ்சர்களோடு கலந்து நெறியின்றி வரி வாங்கினால் அவன் மக்களின் வெறுப்பைப் பெறுவதோடு யானை புகுந்த விளைநிலம் போலத் தானும் உண்ணப் பெறான்; உலகமும் காலமும் கெடும்’, என்றார்.

காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்:
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்:
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானைபுக்க புல போலத்
தானு முண்ணான்: உலகமும் கெடுமே’.

★★

எழுதுவார்க்கு....

குயிலுக்குக் கட்டுரையோ கவிதையோ எழுதுகின்றவர் அத்துடன் தன் முழு முகவரி எழுதுவதோடு – குயிலுக்குரிய தம் சந்தா எண் அல்லது குயில் விற்பனையாளரிடமிருந்து, குயில் வாங்குவதைக் காட்டும் நற்சான்று குறித்து அனுப்பக் கோருகின்றோம்

அப்படி இல்லாத செய்திகள் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

குயில்

Regd No. M. 7030.

இளையமாணவர் திருநாள்

★★★

(அகவல்)

காலை

காலையில் எழுந்து வயிறு கழித்துப்
பாலைப் போலப் பல்லைத் துலக்கிப்
பட்டுப்போல உடம்பு குளித்துச்
சிட்டுப் போலத் தலையை வாரித்
தடுக்கில் குந்தித் தந்ததை உண்டும்
உடுப்பை உடுத்திச் சுவடி எடுத்தும்
துள்ளிக். கூடம் விட்டுப்
பள்ளிக் கூடம் பறக்குமாம் கிளியே!

பள்ளிக்கூடம்

நல்லா சிரியர் பாடம் சொல்வார்;
எல்லா ரும்தாம் இருந்து கேட்பார்.
கெட்ட பிள்ளைகள் கேட்க மாட்டார்.
நல்ல பிள்ளைகள் நன்ருய்க் கேட்பார்.
அண்டையில் இருக்கும் பிள்ளைக ளோடு
சண்டை யிடுவது சரியே இல்லை.
நத்தை போல எழுதலா காது;
முத்தைப் போல எழுத வேண்டும்
கணகண வென்று விட்டு
மணி அடித்ததும் வருமாம் கிளியே!

நடுப்பகல்

நடுப்பகல் உணவு நன்ருய் உண்டு
படிப்பதை எல்லாம் நன்ருய்ப் படித்து
முழுதும் கணக்கைப் போட்டு முடித்தும்
எழுதச் சொன்னதை எழுதி முடித்தும்
தப்பா சரியா என்று சொல்ல
அப்பா இடத்தில் அதையே காட்டித்
தெரு வோரம் பள்ளிக்கு
விரித்த குடையுடன் போகுமாம் வெல்லமே!

வழியில்

பள்ளிக் கூடம் போகும் போது
துள்ளிக் குதிப்பார் துடுக்குப் பசங்கள்;
ஒட்ட மாக ஓடக் கூடாது!
வீட்டுத் திண்ணையில் ஏறக் கூடாது!
வேகும் வெய்யிலில் விளையா டாதே;
போகும் போது வம்பு கூடாது;
நேராய்ப் பள்ளிக் கூடம்
சீராய்ப் போகுமாம் செல்வக் கிளியே!

மாலை

மாலை வேளையில் பள்ளிக் கூட
வேலை முடித்து வீட்டுக்கு வந்து
பழமோ பயருே அம்மா கொடுத்ததை
அழாமல் வாங்கி அமைவாய் உண்டு
தெருவோ ரத்தில் சிரித்து விளையாடி
விருவி ரென்று வீட்டுக்கு வந்து
விளக்கின் அருகில் சுவடி விரித்துப்
பளிச்சென்று மனதிற் படியப் படித்துச்
சோறுண்டு தூங்கும் பிள்ளைபோல்
வேறுண்டா வீடு நிறைந்த செல்வமே?

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.

அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.